இனி எங்கள் காலம் என்று நல்ல பாடலை பாடுங்கள்
உம்மை தாங்கும் தோள்களாய் நாமிருப்போம்
இன்ப வாழ்வை நெஞ்சில் அள்ளி சந்தோச ஆடல் ஆடுங்கள்
உம்மை தாங்கும் வேர்களாய் நமிருப்போம்
உங்கள் நெஞ்சில் வந்த சோகம் எங்கள் நெஞ்சில் நின்று வேகும்
வெந்த உணர்வுகள் ஒன்றாகும் தொலைதூரம் வாழ்ந்த போதும்
நினைவாலே சொந்தம் எங்கும் எங்கள் உதிரத்தில் தமிழ் வாழும்

இனி எங்கள் காலம் என்று நல்ல பாடலை பாடுங்கள்
உம்மை தாங்கும் தோள்களாய் நாமிருப்போம்

அழிவுகள் தந்தது பேரலையே
அழுகைகள் இன்னும் ஆறலையே
துயரங்கள் நீழ்வது முறையில்லையே
தாயக மேனியில் அடி விழுந்தால்
எங்களின் தேகங்கள் வலிக்கிறதே
உறவிலும் உணர்விலும்
நாங்கள் வேறில்லையே
நாம் தேசம் மறந்து போகவில்லை
எம் தேசிய உணர்வு சாகவில்லை
எங்கள் உறவுகள் தவித்திட விடுவோமா
எங்கள் கவலைகள் வாழ்வில் தொடர்வதில்லை
எங்கள் கடமையை செய்வதில் சோர்வும் இல்லை
எங்கள் தேசக்காதலை மறப்போமா

இனி எங்கள் காலம் என்று நல்ல பாடலை பாடுங்கள்
உம்மை தாங்கும் தோள்களாய் நாமிருப்போம்

அகிலமே அழிவை அளக்கிறதே
அது ஏன் எங்களை மறக்கிறது
எமக்கு ஏன் நீதி இன்னும் பிளைக்கிறது
எத்தனை சிலுவைகள் சுமந்தாலும்
எங்குமே வேதனை சுமந்தாலும்
எமக்கா எங்களின் தேசியம் உழைக்கிறது
நாம் தேசம் மறந்து போகவில்லை
எம் தேசிய உணர்வு சாகவில்லை
எங்கள் உறவுகள் தவித்திட விடுவோமா
எங்கள் கவலைகள் வாழ்வில் தொடர்வதில்லை
எங்கள் கடமையை செய்வதில் சோர்வும் இல்லை
எங்கள் தேசக்காதலை மறப்போமா

இனி எங்கள் காலம் என்று நல்ல பாடலை பாடுங்கள்
உம்மை தாங்கும் தோள்களாய் நாமிருப்போம்

இசைத்தட்டு : ஈரமில்லா பேரலை